செ.வெ.எண் :671 நாள்: 13.10.2021

# தஞ்சாவூர் மாவட்டம் வேதபுரி வாய்க்கால் உடைப்பு விரைவில் சீரமைக்கப்படும்-மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

தஞ்சாவூர் மாவட்டம் வடகிழக்கு பருவமழை 2021 கடந்த இரண்டு நாட்களாக பெய்த அடைமழையினால் ஓரத்தநாடு வட்டம் சேதுராயன்குடிகாடு கிராமத்தில் அக்னியாறு வடிநிலகோட்டத்திற்கு உட்பட்ட வேதபுரிஸ்வரர் வாய்காலில் நீர்உடைப்பு ஏற்பட்டு சுமார் 35 ஏக்கர் விளைநிலங்கள் நீர்சூழ்ந்துள்ள பகுதியை மதிப்பிற்குரிய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து விவசாயிகளிடம் வெள்ளபாதிப்புகள் குறித்து கேட்டறியப்பட்டது. அக்னியாறு வடிநில கோட்டத்தின் சார்பின் நீர் உடைப்பு ஏற்பட்ட பகுதியில் தடுப்பு கட்டைகள் அமைத்து மணல் முட்டைகள் அடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆழிவாய்கால் மற்றும் தென்னமநாடு சந்திப்பு பகுதியில் நஞ்சுகொண்டான் வாய்கால் பழுதடைந்த சிறுபாலம் சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கையின்படி பார்வையிட்டு வட்டாரவளர்ச்சிஅலுவலர் மூலம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தென்னமநாடு ஊராட்சிக்கு உட்பட்ட வண்ணான் குளம் வடிகால் வாய்கால் தூர் வாருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இடம் ஆய்வு செய்யப்பட்டது. தென்னமநாடு வேதபுரி வாய்கால் ஆலத்தேரி மதகு கழங்கு பகுதியில் கதவணை கோரியது தொடர்பாக இடம் ஆய்வுசெய்யப்பட்டது.

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெம்மேலி திப்பிய குடி கிராமத்தில் அக்ளியாறு வடிநிலகோட்டத்திற்கு உட்பட்ட வேதபுரிஸ்வரர் வாய்காலில் நீர்உடைப்பு ஏற்பட்டு விளைநிலங்கள் நீர்சூழ்ந்துள்ள பகுதியை மதிப்பிற்குரிய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து விவசாயிகளிடம் வெள்ளபாதிப்புகள் குறித்து கேட்டறியப்பட்டது. அக்னியாறு வடிநில கோட்டத்தின் சார்பில் நீர் உடைப்பு ஏற்பட்ட பகுதியில் தடுப்பு கட்டைகள் அமைத்து மணல் மூட்டைகள் அடுக்கி நீர்உடைப்பை சரிசெய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் கோரிக்கையின்படி நெம்மேலி திப்பியகுடி சோழகன்குடிகாடு கிராமத்தினை இணைக்கும் தார்சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கான நடவடிக்கை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. நெம்மேலி திப்பியகுடி கிராமம் திப்பியகுடி சாலையிலிருந்து திருமேனியம்மன் கோவிலுக்கு புதியபாதை ஏற்படுத்திதர கோரிக்கை விடுத்ததன் அடிப்படையிலும், இராமலிங்கம் வடிகால் நெடுகை 1.80 கி.மீ சட்ரஸ் பகுதியில் உயர்மட்டபாலம் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டது.

பட்டுகோட்டை வட்டம் அண்டமி கண்ணனாறு குறுக்கே கி.மீ 53/10 ல் ரூ.741.64 இலட்சம் மதிப்பீட்டில் நெடுஞ்சாலைதுறை மற்றும் கிராமசாலைகள் கோட்டம் நபார்டு மூலம் கும்பகோணம் - மன்னார்குடி அதிராம்பட்டினம் சாலையில் பொருட்டு உயர்மட்டபாலம் கட்டுமான பணிகள் ஆய்வு செய்யப்பட்டு விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு சொக்கனாவூர் கண்ணனாறு தரைப்பாலம் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின்போது அக்னியாறு வடிநிலக் கோட்டம் செயற்பொறியாளர் திருமதி.கனிமொழி, உதவி செயற்பொறியாளர் திரு.திலீபன், உதவி பொறியாளர்கள் திரு.அருண் கணேஷ், திரு.ஆனந்தராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**